பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 03 2024 7 15

தலைப்புச் செய்திகள் -

1. மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு நாட்களில் வெய்யிலின் தாக்கத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

2. வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை தவறாமல் செலுத்த வேண்டும் என்பதில் உறுதியுடன் இருக்க வேண்டுமென்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹு வலியுறுத்தியுள்ளார்.

3. பிலிப்பைன்ஸ் நாட்டின் இறையாண்மையை காப்பதற்கு இந்தியா தனது முழு ஆதரவை அளிக்கும் என்று தெரிவித்துள்ளது.

4. இந்தியாவின் மின்னணு கட்டமைப்பை இலங்கையிலும் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே கூறியுள்ளார்,

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற குஜராத் அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

----- *இனி விரிவான செய்திகள்* ----

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு நாட்களில் வெய்யின் தாக்கத்தை சமாளிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், இந்திய வானிலை ஆய்வுத்துறை இம்மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரை வெய்யிலின் தாக்கம் மிகவும் அதிகரிக்கக்கூடும் என அறிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை வெய்யிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்று கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு தேவையான பாதிப்பு இல்லாத உணவுகளை பணி நேரத்தில் வழங்க வேண்டுமென்றும், வாக்காளர்களுக்குத் தேவையான குடிநீர், நிழல்குடை உள்ளிட்ட வசதிகளை அமைத்துத்தர வேண்டுமென்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

தேர்தல் நடத்தை விதி மீறல்களை சி-விஜில் செயலி மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

நடத்தை விதிமீறல் தொடர்பான புகார்களை உடனுக்குடன் சரி செய்து தேர்தல் ஆணையத்துக்கு அனுப்புவதற்கு இந்த கைபேசி செயலி துணை புரிகிறது.

போட்டோ காணொளி ஆகியவற்றுடன் புகார்களை பதிவு செய்வதற்கும் இதில் வசதி செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மக்களவை தேர்தலில் முதல்கட்டமாக அடுத்த மாதம் 19-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தமிழகத்தில் 39 தொகுதிகள் உட்பட நாடு முழுவதும் 102 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் நாளை நிறைவடைகிறது.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை மறுநாள் நடைபெறுகிறது.

மனுக்களை விலக்கிக்கொள்ள வரும் 30-ஆம் தேதி கடைசி நாளாகும்.

ராஜஸ்தானில் 12, உத்தரப்பிரதேசத்தில் 8, மத்தியப்பிரதேசத்தில் 6, உத்தராகண்ட், அசாம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தலா 5 தொகுதிகள், பீகாரில் 4 தொகுதிகள், மேற்குவங்கத்தில் 3 தொகுதிகள் உள்ளிட்டவை முதற்கட்ட தேர்தலில் இடம்பெற்றுள்ளன.

**[]<<<>>>[]**

தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பதை கடமையாகக் கருதி வாக்களிக்க முன்வர வேண்டுமென்று தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற மாவட்ட செய்தியாளர்களுக்கான பயிலரங்கில் பேசிய அவர், நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள் சிரமம் பாராமல் வாக்களிக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

குறைவான வாக்குப்பதிவு உள்ள வாக்குச்சாவடிகளில் வாக்கு சதவீதத்தை அதிகரிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக திரு சத்தியபிரதாசாஹூ தெரிவித்தார்.

தமிழகத்தில் 85 வயதுக்கும் மேற்பட்டவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக அவர்களது வீடுகளுக்கே சென்று தேர்தல் அலுவலர்கள் வாக்குப்பதிவை பெறுவதற்கு தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளதாகவ்ம் அவர் கூறினார்.

12-**‘D’**விண்ணப்பப்படிவத்தின் மூலம் இவர்கள் வாக்குகளை செலுத்த முடியும் என்றும், இதுவரை ஏழு லட்சத்திற்கும் அதிகமானோர் இந்த விண்ணப்பங்களை பெற்றிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நான்கு லட்சம் அரசு ஊழியர்கள், மூன்று லட்சம் காவல்துறையினர் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் திரு சத்யபிரத சாஹூ கூறினார்.

சமூக வலைதளங்கள் மூலம் பரவும் செய்திகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் தேர்தல் நடைமுறைகள் சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் திரு சத்யபிரதா சாஹூ அவர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல் முறை வாக்காளர்கள் அனைவரும் நேர்மையாக தங்களது வாக்குகளை செலுத்த வேண்டுமென்று கூறினர்.

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் மேலும் மூன்று வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலத்தில் இரண்டு வேட்பாளர்களும், மணிப்பூரில் ஒரு வேட்பாளரும் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

[]<<<>>>[]

பிலிப்பைன்ஸ் நாட்டின் இறையாண்மையை காப்பதற்கு இந்தியா தமது முழு ஆதரவை அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மணிலாவில் இன்று பிலிப்பைன்ஸின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹென்ட்ரிக்-வுடன் கூட்டாக பேட்டியளித்த அவர், தெற்கு சீன கடற்பகுதியில் பிலிப்பைன்ஸின் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். ஆசியான் உறுப்பு நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு மற்றும் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். உலகின் மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இந்தியாவும் - பிலிப்பைன்ஸும் புதிய செயல் திட்டங்களுடன் வளர்ச்சிப் பாதையில் செல்லும் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

இந்திவாவின் மின்னணு கட்டமைப்பை இலங்கையிலும் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே தெரிவித்துள்ளார். கொழும்புவில் இந்திய துணை தூதரகம் ஏற்பாடு செய்திருந்த மின்னணு பொது கட்டமைப்பு குறித்த மாநாட்டில் உரையாற்றிய அவர், இந்தியா பொருளாதார வளர்ச்சியின் மையமாக வரும் நாட்களிலும் திகழும் என்று கூறினார். கடந்த ஆண்டு தாம் இந்தியா சென்றிருந்தபோது இலங்கை சந்தித்து வரும் பொருளாதார சவால்கள் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் குறித்து இந்திய பிரதமரிடம் தாம் கலந்து ஆலோசித்ததாகத் தெரிவித்தார். பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை இன்னும் இயல்பு நிலைக்கு மீண்டுவராத சூழ்நிலையில், மின்னணு கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி தேவை என்றும் அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் இந்திய துணை தூதர் திரு சந்தோஷ் ஜா, இந்தியாவின் மின்னணு பொது கட்டமைப்பு குறித்து, இலங்கை அதிகாரிகளுக்கு விளக்கினார்.

பொருளாதார வளர்ச்சியிலும், மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதிலும் அதன் தேவை குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

இந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட இந்தியாவின் மின்னணு பொது கட்டமைப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பிரமோத் வர்மா, இந்தியாவின் வங்கி சேவை பத்து ஆண்டுகளில் 20 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக விரிவாக்கம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தில்லி மதுபான கொள்கை ஊழல் வழக்கில் சட்டவிரோத பணபரிவர்த்தனை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள பாரத் ராஷ்ட்ர சமீதி கட்சியைச் சேர்ந்த திருமதி கே கவிதா-வின் நீதிமன்ற காவலை தில்லி நீதிமன்றம் அடுத்த மாதம் ஒன்பதாம் தேதி வரை நீட்டித்துள்ளது.

தனி நீதிபதி காவேரி பவேஜா முன் அமலாக்கப் பிரிவினர் திருமதி கவிதாவை இன்று ஆஜர்படுத்தியபோது, மேலும் 15 நாட்களுக்கு நீதிமன்ற காவலை நீட்டித்து அவர் உத்தரவிட்டார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற குஜராத் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

**[]<<<>>>[]**

ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

மெட்ரிட்டில் நடைபெறவுள்ள இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை, அமெரிக்காவின் **'Annie Xu – Kerry Xu** இணையை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 9-10-க்கு தொடங்குகிறது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் கிருஷ்ண பிரசாத் - சாய் பிரதீக் இணை, கனடா இணையை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு பத்து மணிக்கு தொடங்குகிறது,

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை கால்பந்து தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று ஆஃப்கனிஸ்தானை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

***<u>End of News</u>***